
விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 . ஆனி 16 றம்ழான் 8 இதழ் 137
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-6-82


## யாழ். நூலக நிதி

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் முட்டை(க்குள் வரையப்பட்ட) ஓவியக்கண்காட்சியை யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் பார்வையிடுவதையும், முதல்வருக்கு வலது பக்கமாக, ஓவியர் திரு. எம். எம். சண்முகம் விளக்கக் கொடுப்பதையும் இப்படத்தில் காணலாம். கண்காட்சியில் வசூலாகும் முழுநிதியும் யாழ். பொதுசன நூலகத்துக்கு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



# கைதான தமிழ் இளைஞர்களுக்கு "அரசியல் தஞ்சம் அளிக்குக!"

## பாரத ஜனாதிபதி, பிரதமருக்கு

### யாழ். மாநகரசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு இந்தியாவில் தஞ்சம் அளிக்கக் கோரும் தீர்மானம்; யாழ். மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் மாதாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, சமாதான நீதவான் திரு. சு. சண்முகராசா மேற்படி பிரே

[8-ம் பக்கம் பார்க்க]

## உரிமைகளைப் பெறும்வரை போராட்டம் நடத்துவர்!

பெய்ரூட், ஜூன் 29

''பாலஸ்தீனிய மக்கள் தமது உரிமைகளைப் பெறும்வரை போராட்டத்தைக் கைவிட மாட்டார்கள். அவர்களின் விடுதலைப் போராட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்'' என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் ஜனப் யசீர் அரபாத் பாலஸ்தீனிய உயரதிகாரிகளின் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்

அதேவேளை லெபனான் நெருக்கடிக்கு அமைதியான வழிகளில் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் எவ்விதமுடிவும் எடுக்கப்படாது தோல்வியடைந்ததாக செய் கள் தெரிவிக்கின்றன. (வெ)

## நீரில் மூழ்கும் பனாமா கப்பல்!

புதுடில்லி, ஜூன் 29

அந்தமான் தீவுக்கு அருகே பனாமா நாட்டின் கப்பல் ஒன்று கடலில் மூழ்கி வருவதாக அறிவிக்கப்பட்டது.

இக்கப்பல் மூழ்கும் செய்தி அறிவிக்கப்பட்ட அரைமணி நேரத்திற்குள் இந்தியாவின் கடற்படை அங்கு கப்பலொன்றையும், விமானமொன்றையும், ஹெலிகாப்டரையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [வெ]


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருடம் ஆனி மாதம் 16-ம் திகதி (1982-07-01) புதன்கிழமை பின்னிரவு 3-08 மணி தொடக்கம் 3-32 மணிவரை நிகழும் இடபலக்கின சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறைச் செல்வன்
**ஜெயசேகர்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைச் செல்வி
**சந்திரவதனா**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் பெரியோர்கள் திருமணம்செய்து வைக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சமேதரராய் வந்து திருமணத் தம்பதிகளை நல்லாசிகூறி வாழ்த்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
செ. காஞ்சிமாவடிவேல்
மயிலியதனை,
தொண்டைமானாறு

திரு. திருமதி
ந. திருநாவுக்கரசு
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

3689


## மத்யூ திடீர் விஜயம்

(மாவிட்டபுரம்)

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ நேற்று முன்தினம் காங்கேசன்துறைசிமெந்துத் தொழிற்சாலைக்கு திடீர் விஜயம் செய்தார்.

அனுராதபுரத்திலிருந்து காரில் வந்த அமைச்சருடன் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தலைவர் திரு அசோகா சோமரத்தினவும் மற்றும் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

தொழிற்சாலையின் 3ம் கட்டப் பிரிவின் அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்ட அமைச்சர், வேலைகளைத் துரித கதியில் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதில் அக்கறை காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. துறைமுக வேலைகளையும் அவர் பார்வையிட்டார்.

3ம் கட்டப் பிரிவின் திட்ட முகாமையாளர் திரு ஜெயமான அபிவிருத்தி வேலைகள் குறித்து அமைச்சருக்கு விளக்கங்களை அளித்தார்.

அமைச்சர் விஜயத்தையொட்டி நேற்று முன்தினம் 3ம் கட்டப் பிரிவில் வேலைகள் எதுவும் இடம் பெறவில்லை

பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

[8ம் பக்கம் பார்க்க]

## "வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குக!"

### அ. பொ. ஊழியர்சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

''பொது வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதால் வேலை இழந்து துன்புறும் தொழிலாளர்களுக்கு திரும்பவும் வேலைவழங்க வேண்டும். அரசகரும மொழித்திட்டத்திலிருந்து சிற்றூழியர்கட்கு விதிவிலக்களிக்க வேண்டும். தற்காலிகமாக சிற்றூழியராக பணிபுரிவோரை நிரந்தரமாக்கவேண்டும். சிற்றூழியருக்கு வழங்கப்படும் பதவி உயர்வுகளில் சேவை மூப்பு கவனிக்கப்படவேண்டும். சிற்றூழியர்கட்கான சேவை உடைதைப்பதற்கு வழங்கப்படும்

[8-ம் பக்கம் பார்க்க]


## உபநயன அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் துந்துபி வருஷம் ஆனி மாதம் 17ம் திகதி 1-7-82 வியாழக்கிழமை காலை 9 மணி 32 நிமிஷம் தொடக்கம் 10 மணி 44 நிமிஷம் வரை உள்ள சிங்க லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வர் உதயமுருகவன் அவர்கட்கு பழை - வீமன்காமம் தலையிட்டி ஞானவயிரவர் ஆலயத்தில் பிரமோபதேசமும் உபநயனமும் செய்யத்திருவருள் பாலித்திருக்கிறது. அத்தருணம் அன்பர்கள் அனைவரும் சமூகம் அளிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
அ. துரைச்சாமி ஐயர் குடும்பத்தினர்
ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம்
3714 மாவிட்டபுரம், தெல்லிப்பழை.



## இன்று திறப்பு விழா

### எம். எஸ். இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

இருபாலை வீதி, கோண்டாவில்.

போல்ட் and நட்ஸ், குண்டு பிணைச்சல், கம்பிஆணி வால் பிணைச்சல், திருங்த, குண்டுகொழுக்கி மற்றும் ஏனைய வகைகளின் உற்பத்தியாளர்கள்.

இன்று பிற்பகல் 6-30 மணி தொடக்கம் 9-30 மணி வரையுள்ள சுபநேரத்தில் எமது தொழிற்சாலை திறந்து வைக்கப்படும்.

நண்பர்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. க. மோகன்தாஸ் வே. பாலசுப்பிரமணியம்
பணிப்பாளர் தலைவர்
3701 கொபாமில் கூட்டுக்கம்பெனிகள்.

இதுவரை A/L விஞ்ஞான பாடங்களை மட்டும்
நடாத்தி வந்த எமது 3 நிறுவனங்களிலும்

**A/L 1983 1984 பரீட்சைகளுக்கு**

விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை
பிரிவுகளுக்குமான எல்லா பாடங்களுக்குமான
புதிய வகுப்புகள்
ஆரம்பம் 5-7-1982

**BOND INSTITUTES**

274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்: 1. 72, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. 81, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 8258 Grams: BOND


## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
Dr. பொன்னம்பலம் பரமசுவாமி
காரைநகர் மேற்கு.
தற்போது நம்பர் 66, கம்பல் பிளேஸ், கொழும்பு.
—வழக்காளி

ஈடு வழ / 12510 எதிராக

செல்லத்துரை குமரகுரு
வல்வெட்டித்துறை —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 12510ம் இல. வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1982ம் ஆண்டு ஆடி மாதம் 14ந் திகதி (14-7-82) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முதலாம் காணியும் பி. ப. 2 மணி தொடக்கம் இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 58015/- மேலும் ரூபா 40,000/- 20-5-71 தொடக்கம் 28-1-72 வரைக்கு 100க்கு 15 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டில் கட்டப்பட்ட தொகையைக் கழித்து மிகுதி வரவேண்டியிருப்பதாலும் கொடுபட்ட தொகை 11-8-68 ரூபா 1200 19-11-71 ரூபா 5000/- 19-6-73 ரூபா 15000/- 17-5-76 ரூபா 5000/- 16-7-76 ரூபா 5000/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று யாழ்ப்பாணப்பட்டினம் 2ம் பிரிவில் 1935ம் ஆண்டு பங்குனி மாதம் 21ந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. அலோசியஸ் ஆல் 121ம் நம்பர் படத்தில் சொரியலாய் அரைவாசிப் பங்குள்ள 1ம் துண்டின் விஸ்தீரணம் நி. பர. ஒன்று குளி 1, 9/16 மதிப்பிலக்கங்கள் 22, 24, 26, பிரதான வீதி 51 முதலாம் குறுக்குத்தெருவிலும் (பழையது) புதிய மதிப்பிலக்கம் 40, 46 பிரதான வீதியில் மேல் கட்டிடங்களும் கிணறும் தெற்கு எல்லைச் சுவரில் அரைவாசிப்பங்கும் வீட்டு வெளியிலுள்ள அதைச் சேர்ந்தவைகளும் பின் கதவிலும் கிணற்றிலும் பயிர்வகைகளும் அதைச் சேர்ந்தவைகளும். ஆனால் 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் C. C. குமாரசாமியால் தயாரித்த 447ம் படத்தின்படி சொல்லப்பட்ட 1ம் துண்டின்படி பர. நில 1 குளி 1, 86 எல்லை கிழக்கு C. முத்துர்குமாரு பெண் சிசிலாயாவின் உரிமைக்காரரின் ஆதனம் வடக்கு பிரதானவீதி மேற்கு முதலாம் குறுக்குத்தெரு தெற்கில் சொல்லப்பட்ட படத்தில் 2ம் துண்டு A A. மேதருக்குரியதும் தற்போது K. சங்கரப்பிள்ளைக்குரிய ஆதனம் இதடங்கலும் 2 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை சோனகன்தறை நில. பர. 2½யும் கிட்டங்கிகளும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் மதிப்பிலக்கம் 34 (பழசும்) தற்போது புதிய மதிப்பிலக்கங்கள் 108, 110, 112, 114 புன்னாலை றேட் யாழ். மாகரசபை எல்லைக்குள் எல்லை கிழக்கு K. சுந்தரத்தினதனம் வடக்கு மேற்கும் வண்ணை கதிரேசன் கோயிலுக்குரிய ஆதனம் தெற்கு றேட் ஆனால் 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ம் திகதி தயாரித்த 448ம் படத்தின்படி நில. பர. 2 குளி 11 .79 இதடங்கவிற் சொரியலாய் ¼ நாலில் ஒன்று.

க. சுப்பிரமணியம்,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

89. முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
20-5-82

3692




# இன்றைய பலன்

ஆனி மாதம் 16-ம் திகதி
புதன்கிழமை
(30—6—82)

மேடம்: எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதமளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம்.

இடபம்: பிரச்சனைகள் மேலும் சிக்கலாகும். உணவு விடயத்தில் பிரியக் குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று.

மிதுனம்: விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர்கள். உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரலாம். இன்று நீர் கவலையில்லாத மனிதன்.

கடகம்: எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். தொழிற்துறையில் மனதுக்கேற்ற வண்ணம் மாற்றங்கள் இடம் பெறும்.

சிங்கம்: வேண்டியளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள். நீண்ட நாள் கனவு இன்று நனவாகும்

கன்னி: பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும் தொழில்புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையை தவிர்த்துகொள்ளவும்.

துலாம்: இனப்பூசல் மூலம் இதயபாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றவும்.

விருட்சிகம்: மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும்புகழ் அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு.

தனு: அலட்சியப் போக்கினால் பலதவறுதல்களுக்கு இடமேற்படக்கூடும். பிடிவாதக் குணம் பின்தங்கிய நிலையில் தள்ளிவிடப்படும்.

மகரம்: நீண்டநாள் தலையிடி கொடுத்த ஒரு பிரச்சனை இன்று நல்ல முடிவுக்கு வரும். தாய்வழி மூலம் புதிய ஆதரவு கிடைககும், நல்ல நாள்.

கும்பம்: மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம். முதியவர் ஒருவர் உங்களுக்கு நல்வழிகாட்டுவார். அதனால் பொருள் வரவுஉண்டு.

மீனம்: எதிர்பாராத வகையில் ஏமாற்றம் அடைவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைத் தொடுக்கும். துக்கதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
கு. வேலுப்பிள்ளை

---

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி அன் பிரசித்த நொத்தாரிஸ், 52, வைமன்வீதி
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற 31/12, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம் நடராசா சண்முகநாதன் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

நடராசா சண்முகநாதன் கைம்பெண் புஸ்பகாந்தி 31/12, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம்

மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 3662

எதிராக

1. சண்முகநாதன் கிருஷ்ணமூர்த்தி,

2. சண்முகநாதன் சற்குணமூர்த்தி (பராயமற்றவர்)

3 சண்முகநாதன் திருமூர்த்தி (பராயமற்றவர்)

4, நடராசா சண்முகநாதன் மகள் கலைச்செல்வி, எல்லோரும், 31/12, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம், 2ம், 3ம், 4ம் எதிர்வாதிகள் பராயமற்றவர்கள் அவர்களது பாதுகாவலர் மூலம் தோன்றுகிறார்கள்.

5. நடராசா சிவநாதன், கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ஆம் ஆண்டு ஆடி மாதம் 30ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1981ஆம் ஆண்டுஆனிமாதம் 18ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3702

## கிளிநொச்சியில் விளையாட்டுவிழா ஏற்பாடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி அருணோதய விளையாட்டுக் கழகத்தினர் அடுத்தமாதம் 15ம் திகதி விளையாட்டுவிழா வொன்றை றெட்டறிக்கோ அரங்கில் நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். தாச்சிப் போட்டி, கரபந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி உட்பட சிறந்த பிரதேச ஆணழகன், அழகிக்கான போட்டிகளும் இவ்விழாவில் இடம் பெறவுள்ளன. ]அ]

## பட்டமளிப்பு

[சரவணை]

புளியங்கூடல் அருள்மிகு ஸ்ரீமகாமாரிஅம்பாள் உற்சவத்தின்போது பத்துநாட்களும் 'வில்லிசை- விரிவுரை நிகழ்த்திய புத்தளம் திரு. சோமஸ்கந்த ஆசிரியருக்கு, உர்சவ இறுதி நாள் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர் பாமாச்சாரியார் 'வில்லிசை வித்தகன்' எனும் பட்டமளித்துக்கௌரவித்தார்.

## கலந்துரையாடல்

(கொழும்பு)

பாரதியார் நூற்றாண்டைக் கொண்டாடுமுகமாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதிநூற்றாண்டு விழாத் தேசிய குழுவினருடன் இணைந்து புத்தக புகைப்படக் கண்காட்சியொன்றை நடத்தவிருக்கின்றது. இதுபற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிறுமாலை ஐந்து மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (கி)


# வரி விளம்பரம்

### தேவை

கமிசன்அடிப்படையில் பீடி சுற்றித் தருவதற்கு ஒப்பந்தகாரர் தேவை. தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, ஆர். வி. ஜி. பீடிக்கம்பனி, 275 பீச் றோட், யாழ்ப்பாணம். 3663

பெண் அறிவிப்பாளர் தேவை. ஒலிவாங்கிக் கருவிக்குரிய குரல் வளம் உடையவர்கள் மாத்திரம்05-07-82க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேஜர்ஷண், மணிக்குரல் விளம்பரசேவை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3696)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் — பலாலி வீதிக்கருகாமையில் ஊரெழு பமன் கோவில் சந்துக்குத் தெற்குப் பக்கமாக 100 யார் தூரத்தில் 9 பரப்பு (இராசனின் தோட்டம்) காணி விற்பனைக்குண்டு. நேரில்தொடர்பு கொள்ளவும்: அப்புத்துரை, தபால் கந்தோர், நீர்வேலி. 3687

4-ம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இல. 55, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் காமதேனு ஸ்ரோசுடன் தொடர்பு கொள்ளவும். (3698)

சன்யோ பால்/சிக்கம் VHF UHF 16'' கலர் டி. வி. நஷனல் வீடியோ கசற் (NV 8600 EMVHS இரண்டும் புதியவை. விற்பனைக்குண்டு. தொடர்பு: 84, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3694)

புனரமைக்கப்பெற்ற Honda C/90 மொடல்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [3695]

### பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல். செய்முறை அறிமுறையுடன் வகுப்புக்கள் ஆரம்பம்: 03-07-82 நேரில் வரவும் C. E. T. ஜலன்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு எதிரில்), 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3693)


## ஐயனார்கோவில் வருடாந்த உற்சவம்

[சங்கானை]

சண்டிலிப்பாய் ஐயனார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

## வருடாந்த உற்சவம்

[சங்கானை]

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை 26ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

திருவிழா தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெற்று கடைசித் தினமாகிய எதிர்வரும் திங்கட்கிழமை இரவு வீதி உலா நடைபெறும்.

## ''ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான கொடுமைகள் நீங்கும்வரை போராட்டம் வெற்றிதரா''

[யாழ்ப்பாணம்]

''யாழ். மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களின் சட்ட பூர்வமான உரிமைகள் இற்றைவரை கொடுக்கப்படாமலேயே இருக்கின்றது. தொழில் இலாகா இதற்காகத் துரிதநடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே தலைமைத் தொழில் இலாகா மூலம் உடன் நடவடிக்கை எடுத்துத் தீர்க்கப்படாத பிரச்னைகளைத் தீர்க்க ஆக்க பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்''

இவ்வாறு லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு எல் டபிள்யூ பண்டித, லங்கா தொழிற்சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மாவட்டச் செயலாளர்திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது;-

''தொழில் இலாகாவை முற்றுமுழுதாக தொழிலாளர்கள் நம்பியிருக்கமுடியாது. வர்க்க ஒற்றுமையுடன்போராடுவதன் மூலம்தான் கோரிக்கைகளை வென்றெடுக் முடியும்.

நல்லூரிலுள்ள ஒரு எஞ்சினியரிங் தொழிற்சாலை இளைஞர்களை வைத்து அடிமை வேலை செய்விப்பதாகவும், இவர்கள் மாதம் முப்பது நாளும் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 20ம் நூற்றுண்டில் இப்படி நடப்பது மிகவும் வேதனைக்குரியது. இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தொழிலாளர்களுக்கு பல சட்டபூர்வமான உரிமைகள் இருந்துங்கூட அவை சரிவர அமுல் நடத்தப்படுவதில்லை. தொழிற்சங்கம் மூலம்தான் இவற்றை அமுல் நடத்தமுடியும். சில முதலாளிமார் தொழிற்சங்கங்களை பேயோ பிசாசோ என எண்ணுகின்றனர். இதுதவறு நிர்வாகத்தை சரிவர நடத்த உதவி செய்வது தொழிற்சங்கம். இதனுல் நிர்வாகிக்கும் பிரயோசனமுண்டு. தொழிலாளர்களுக்கும் பிரச்னைகள் இல்லை''

[மா]

முங்கொடை

## முருகன் ஆலய கும்பாபிஷேகம்

[கரவெட்டி]

கரவெட்டி மேற்கு மத்தோனி ஸ்ரீ முங்கொடை முரு ஆலய மாக கும்பா பிஷேகம் இன்று புதன் கிழமை காலை நடைபெறவிருக்கின்றது.

மண்டலாபிஷேகம் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

கடந்த திங்கட்கிழமை மாலை கிரியாகால நிகழ்ச்சிகள் ஆரம்ாகியுள்ளன

திருப்பணிவேலைகள் செய்து முடிக்கப்பட்ட இவ்வாலயத்துக்கு வேண்டிய கலசங்களை தொழிலதிபர் திரு. க. கனகராசா, ஆலயத்துக்கு நேரில் சென்று வழங்கவுள்ளார்.

(மா)

ஆவரங்கால்

## சிவன்கோவில் மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன்கோவிலில் இன்று காலை ஒன்பது மணிக்கு மகாகும்பாபிகேஷம் நடைபெறுகிறது. கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பு நிழ்ச்சியாக மாலை 6மணிக்கு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு உரைநிகழ்த்துவார்.

## பாராட்டு

(கொக்குவில்)

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் கந்தபுராணப் பிரசங்கம் நிகழ்த்திய திருப்பூங்குடி வி கே. ஆறுமுகத்துக்கு பூங்காவன விழாவில் பாராட்டு நிகழ்ந்தது. ஆலய முகாமையாளர் திரு. சு. சிவநேசன் பொற்கிழி வழங்கி பாராட்டினார்.

## ''விளையாட்டிலும் மாணவர் அக்கறைகாட்ட வேண்டும்''

(புலோலி)

''மாணவர்கள் கல்வியில் மாத்திரமின்றி விளையாட்டுக்களிலும் பங்குபற்றும்போது தான் எதிர்காலத்தில் நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாகத் திகழமுடியும் இதனைக் கருத்தில்கொண்டே அரசாங்கம் விளையாட்டுத் துறையை ஊக்குவித்துவருகின்றது''

இவ்வாறு புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் குறிப்பிட்டார். அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் இவ்விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

அபதிர் தனது தலைமையுரையில் ''உடல் உறுதியை வலுப்படுத்தவும் மாணவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தவும் விளையாட்டுகள் முக்கியமாகின்றன. எனவே விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டியது மிக முக்கியமாகின்றது''என்றுர்.

அனுராதபுரம்

## விவேகானந்தசபை நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம்விவேகானந்த சபையின் 57வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது, பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த திரு த. சகாதேவன் பொதுச் செயலாளராகவும்.

தலைவர் பதவிக்கு பிரபல சட்டத்தரணியும்,சமூகசேவையாளருமான ம. கணேசமூர்த்தியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய உறுப்பினர் விபரம் பின்வருமாறு:-

சபையின் காப்பாளர்களாக சுவாமி பிரேமாத்மானந்தா, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க. ஞானச்சந்திரன், பொறியியலாளர், க. த. சுப்பிரமணியம், சி. கந்தசாமி, அனுராதபுரம் கதிரேசன் கோவில் சிவஸ்ரீ பொ. நடராஜக் குருக்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

துணைத்தலைவர்கள்: வ. இராமச்சந்திரன், சி. பொன்னுத்துரை, அ. வேல்முருகு, கை. இரத்தினசிங்கம், இ. சிவசுப்பிரமணியம்.

துணைச் செயலாளர்கள்: க. சச்சிதானந்தம், வே. பாலேந்திரா. பொருளாளர்: த. சண்முகநாதன். நூலகர்: வே. அருணகிரிநாதன். விடுதிப் பொறுப்பாளர்: தி. மாணிக்கவாசகர்.

## திருட்டு நடத்த வேவு பார்த்தாராம்
### சந்தேக நபர் பொலிஸில்

(மாவிட்டபுரம்)

திருட்டுக்கு வேவு பார்க்க வந்தவர் என சந்தேகிக்கப்பட்டு பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நபர் ஒருவர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பாலச்சந்திரன் என்பவரே இவ்வாறு பிடிக்கப்பட்டவர்.

மயிலிட்டி மார்பு நோய் வைத்திவசாலையில் கடமை புரியும் வைத்திய அதிகாரி திரு. கதிர்காமர் சண்முகலிங்கம் என்பவரது வீட்டுப்பக்கமாக கடந்த 3 வாரங்களுக்கு முன் உலாவிய இந்த நபர் வைத்திய அதிகாரியின் மகளிடம் வீட்டில் நகைகளை எங்கே வைத்திருக்கிறீர்கள் என விசாரித்துப் பார்த்ததாகவும் பின்னர் மீண்டும் இங்கு வந்து வைத்திய அதிகாரியின் வீட்டுப்பக்கம் இவர் உலாவிய சமயம் பொதுமக்கள் இவரில் சந்தேகம் கொண்டு பிடித்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நபர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இவர் திருடர் கோஷ்டியைச் சேர்ந்தவரா? இவரிடம் திருடும் எண்ணம் இருந்ததா? இவருடன் இணைந்து மேலும் யாராவது செயல்படுகிறுர்களா? என்பது பற்றியெல்லாம் பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

## பிரதேசசபைத் தலைவராக தெரிவு

[மாவிட்டபுரம்]

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவராக திரு. எஸ். சிவமகாராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க,மகாதேவா தலைமையில் பிரதேச சபை அங்குரார்ப்பணக் கூட்டம் நடந்தது. வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பதினுறு கிராமோதய சபைகளின் தலைவர்களில் 14 தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். இருதலைவர்களும் சமூகமளிக்கவில்லை.

தலைவர் தெரிவின்போது மாவிட்டபுரம் கிராமோதய சபை தலைவர் திரு. எஸ். சிவமகாராஜாவை பிரதேச சபை தலைவராக மயிலிட்டி கரை கிராமோதய சபைத் தலைவர் திரு ஐ.பேரின்பம் பிரேரிக்க, இளவாலை கிராமோதய சபை தலைவர் திரு வி. சண்முகநாதன் அனுவதித்தார்.

போட்டி ஏதுமின்றி திரு. சிவமகாராஜா பிரதேச சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், காங்கேசன்துறை எம். பீ. திரு அ. அமிர்தலிங்கத்தின் செயலாளரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சம்.பத்திரிசியார் கல்லூரி அதிபர்

சம். பத்திரிசியார் கல்லூரி அதிபரும் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஆசிரியருமான அருட்திரு பிரான்சீஸ் மைக்கல் யோசவ் அடிகளின் 50வது பிறந்தநாளை இன்று சம். பத்திரிசியார் கல்லூரி தனது குடும்பத்தினத்துடன் இணைத்து பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது.

அருட்திரு மைக்கல் யோசவ் அவர்கள் எளிமை, இனிமை, சிந்தனைக்கூர்மை இவற்றின் மொத்தத்தொகுப்பு புதியதோர் சமுதாயத்தை உருவாக்கத்துடிக்கும் துடிப்புள்ள சிந்தனைச்சிற்பி புதுமைகளைப் புகுத்தி சமுதாயத்துக்கு புத்துணர்வு ஊட்ட அவர் முனைகையில் அவர் அனுபவித்த அனுபவிக்கின்ற சோதனைகள் வேதனைகள் அநேகம் ஆனுலும் இந்த ஐம்பது ஆண்டுகளாக அவர் நடாத்திய 'புதிய உலகினை' உருவாக்கும் பணியில் அவர் பெற்ற அன்பு வெற்றியின் சின்னமே இன்று அவர் வகிக்கும் அதிபர் பதவி.

அவர் அதிபராக மட்டும் திகழவில்லை. மாணவர்களை அரவணைக்கும் கரமாக ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் கரமாக விளங்குகிறுர். அவர் கல்லூரியுடன் மட்டும் தனது சமுதாய உருவாக்கலை முடிக்கவில்லை. ''நூலக மீட்பு நிதிவார'' பாடசாலை நிதிசேகரிப்பின் தலைவராக அதிபர்கள் சங்கத்தலைவராக எத்தனையோ வழிகளில் சமுதாயத்திற்கு நற்பணியாற்றிவருகின்றுர்

தனது ஒளியை மறைக்க முயலும் தடைகளை சோதனைகளை எல்லாம் வென்று கிறிஸ்தவப் பெருவிளக்காக இப்புவியில் பலாண்டுபெருவாழ்வியற்றிட தமிழ்ச்சமுதாயத்துடன் இணைந்து வாழ்த்துகிறோம் அவர் விரும்பும் இசைமொழியில் கூறுவதானுல் ஹப்பி பேர்த் டே ரு யூ...'

—பற்றிமாகரன்

## நல்லூர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து பரிஷத்திற்கென ஒரு கட்டிடம் அமைப்பதற்கு நல்லூர் முத்திரைச் சந்தையடியில் ஓர் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை எமது வடமாகாண அரசியல் உறுப்பினர்களுடன் அல்லாமல் இதுவரை எமது வடமாகாண அரசியலில் தலையிடாத கிழக்கு மாகாண அமைச்சர் ஒருவரும் தலையிடுவதைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது இந்து பரிஷத்திற்குக் கொடுக்கப்பட்ட இடம் நல்லூர் இராஜதானியின் ஆய்விற்குரிய இடமெனத் தெரிவிக்கிறுர்கள். ஆனுல் இற்றைவரை உண்மையான நல்லூர் இராஜதானியின் சங்கிலியன் தோப்பு ஒருகுடியேற்றத்திட்டமாகவும் தொழிற்சாலைக் காலணியாகவும் மாறி எமது கலாசாரத்தைத் தினமும் அழித்துவருகிறது. அதுமட்டுமன்றி நல்லூரின் கடைசித் தமிழ் மன்னனின் இல்லமெனக் கருதப்படும் வளவுக்குள் வேறு ஸ்தாபனங்களுக்குக் காணி கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்த்தும் பாராது தடுக்காது பாராமுகமாக இருந்துகொண்டு இந்து பரிஷத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை மட்டும் ஆய்விற்குரியதெனக் கூறிஎதிர்ப்புக் கிளம்புவது நியாயமாகுமா? ஆதிகாலத்தில் பறங்கியர் எமது பழமைவாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கிய இடத்திற்கு அண்மையிலேயே இந்துபரிஷத் கட்டிடம்அமைப்பதற்கு ஒரு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எவரையும் புண்படுத்தாத வகையில் அமையவிருக்கும் இப் புனித சைவத்திருப்பணிக்கு ஏன் இந்த முட்டுக்கட்டை என்பதை எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் விளக்கவேண்டும்

--க. சி. இராஜேஸ்வரன்
ஆடியபாத வீதி,
நல்லூர்.


# 27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான பிஞன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ். லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர் சேனநாயக்கா ஏ எம். எக்ஸ். ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பிஞன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கேட்டு மூலதனம் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டு வைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,826 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,048 | 9,106,588 | 861,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,692 | 145,561 | 115,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 36 மாதங்கள் | 15 % வருடம் |

இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கவேண்டி உள்ள தொகையாகும்

த பிஞன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

31-3-81வரை ரூபா 10கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

### மணிவாக்கு

பிறர் வியந்து பாராட்டும்வண்ணம் நடந்துகொள்வதற்கான ஆசையும் அறிவும் ஏற்படுத்துவதே குழந்தைகளை கௌரவமானவராக வளர்ப்பதன் அடிப்படையாகும். — ஹேம்ஸ்.

# நமது நோக்கு

## பாலஸ்தீனியர் படும்பாடு

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி பெய்ரூட்டிலுள்ள பாலஸ்தீனியபடைகள் கடல் மார்க்கமாக வெளியே செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நடந்தேறிய திட்டமிட்ட மின்னல்போரில், பெய்ரூட்டில் பத்துலட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்; கொல்லப்பட்டவர்கள், கடுங்காயப்பட்டவர்கள், உடல், மனவலி இழந்தவர்கள்; பெரும்பாலும் குழந்தைகள் இந்தப் பத்துலட்சத்தில் அடங்குகின்றனர்.

கடைசி பாலஸ்தீனியர் ஒருவர் இருக்கும்வரைக்கும் பெய்ரூட்டைத்தாக்க தயாரான இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகிறது.

லெபனன் ஜனாதிபதி ''தலைநகராகிய பெய்ரூட்டை இஸ்ரேலின் தீவிர ராணுவ தாக்குதலிலிருந்து காப்பாற்றுங்கள்'' என்று உலக நாடுகளுக்கு விடுத்த அவசரவேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் தெரிகின்றது.

இந்த ஆபத்தான நிலையில் இறுதிவரைக்கும் போரிடுவோம் என்றுகூறிய பி. எல். ஓ. தலைவர் அரபாத் தமது படைகளையும் மக்களையும் தப்ப வைக்க இணக்கம்தெரிவித்திருப்பது நம்பக்கூடிய செய்தி.

பாலஸ்தீனியரின் பயங்கரவாதம் பற்றிநாம்மறந்துவிட்டோமென்று நினைப்பது தவறு. விடுதலை இயக்கம் வன்செயலில்—கெரில்லா யுத்தத்தில் இறங்குவது ஆற்றாக்கொடுமையில் என்பது ஓரளவுக்கு உண்மை; அது எவ்வளவு தூரம் வெற்றிக்கு இட்டுச் செல்லும் என்பது சந்தேகம்.

கடைசி யூதர் உயிருடன் இருக்கும் வரை ஜெர்மனி கௌரவமாக வாழமுடியாதென்ற சித்தாந்தத்தை செயற்படுத்த எத்தனித்தவர் ஹிட்லர்; முழுஉலகையும் பயங்கர உலக யுத்தத்தால் நடுங்க வைத்தவர்; அவர் எங்கு போனாரென்பது இன்றும்மர்மம் ஆனால் அன்று தவித்த யூதர்இன்று அகில உலகையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டனர்; பாலஸ்தீனியரை பூண்டோடு அழிக்க முற்பட்டுள்ளதை; வரலாற்றின் படிப்பினையை மறந்தவர்களாய், விடுதலை இயக்கங்களின் விபரீதப் போக்குகளையும் புரிந்து கொள்ளும் மனோபாவம் அற்றவர்களாக இருக்கின்றனர்.

'வெளியேறு அல்லது உங்களுக்கு அழிவு' என்ற சவாலை பிரிட்டன் போக்லந்தில் விடுத்து; அதனை நிறைவேற்றி விட்டதாகக் கௌரவப்படுகிறது; எத்தனை உயிர்கள் அழிந்து விட்டன. கௌரவம்தான் பெரிதென நினைக்கும் பிரிட்டன் இன்று அந்தப் பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட்டதா?

அமெரிக்காவின் தயவை நாடுகிறார் திருமதி தட்சர்; ஆனால் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை இஸ்ரேல்! அந்தத் துணிவில் அது புரியும் அக்கிரமங்களை அடக்க வல்லவர் யார்?

அரபு நாடுகளின் ஒற்றுமையீனத்தில் அதிக நம்பிக்கை வைத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி றீகன், தமது பேச்சுவார்த்தைகளை சாதுர்யமாக இஸ்ரேல் சார்பில் நடத்தி அமெரிக்கா சார்பான அரபு நாடுகள் உதவியுடன் பீ எல் ஓவுக்கு 'அள்ளி வைக்க' முயல்கின்றார் போலும், 'விடுதலை இயக்கம் வீண்போவதில்லை'' என்பதை மறந்து விட்டார் போலும்.

போக்லந்தில் சமாதானம் பேசிய ஜனாதிபதி றீகன், தருணம் பார்த்து பிரிட்டனுக்கு உதவ முன்வந்தார்; இந்த விடயத்திலும் அதே தந்திரம்!

தந்திரம் தலைகாக்க மாட்டாது நசுக்கப்படும் பீ எல் ஓ அழிந்துவிட மாட்டாது. இஸ்ரேல்போல் கிளைத்தெழுமென்பது உறுதி.

## கிறித்தவ இளைஞர் சங்கம்

கொழும்பு கிறித்தவ இளைஞர் சங்கத்தின் நூற்றாண்டுவிழா நேற்று முடிவடைந்தது.

பெருமையுடைய இந்த ஸ்தாபனம் நாடு முழுவதற்கும் ஒரு 'குட்டி சுவிற்ஸலந்து' என்றுவர்ணிப்பது தவறாகாது.

கிறீத்தவ பெருமக்கள் தொடக்கிய இளைஞர் நிலையம் எம்மதத்தவர்க்கும் இனத்தவர்க்கும் சாந்தியளிக்கும் ஒரு அன்பு இல்லமாக விளங்குகின்றது.

கொழும்பு மெயிலில் களைத்துவரும் யாழ்ப்பாணவாசிகள், எந்தநேரத்திலும் அமைதியாகத் தங்க வசதியளிக்கும் விடுதி, நாலுபக்கங்களிலிருந்து கொழும்புக்குப் படைஎடுக்கும் மக்கள் நிதானமான செலவில் தங்க மிக அழகான வசதியான ஹொஸ்டல், அங்கத்தவர்கள் படிக்கத் தரமான நூல்நிலையம், பலவித விளையாட்டுகளுக்கும் உடற்பயிற்சிகளுக்கும் தக்கவசதிகள்; இன்று அதன் 'ஒரு ரூபாய் தேநீரின்' சுவையை நாடி அங்கு அளவளாவத் திரளும் மக்கள் பலர் இத்தகைய சிறப்புகள் நிரம்பிவழியும் நிறுவனமே கொழும்பு வை. எம். சீ ஏ.


ஆர்மீக அடிப்படையில் நிறுவப்பட்ட இந்த இளைஞர் சங்கம் நாட்டின் பல பெரியார்களை உருவாக்கியுள்ளது. அத்தகைய சங்கத்தைப் பேணி வளர்த்தவர்களில் தமிழ்ப் பெரியார் அமரர் ஆர். ஓ. பி. யூவெல் 35 வருடங்கள் பொதுக் காரியதரிசியாகப் பெரும் புகழ்ஈட்டியுள்ளார்; இன்றைய பொதுக்காரியதரிசியும் ஒரு தமிழரே என்பது பெருமைக்குரியது.

சமாதான வாழ்வின் சின்னமான இச்சங்கம் நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றோம்.

# பொது சேவையே பொன்என

## போற்றிய டாக்டர் சண்முகரத்தினம்

(அமரர் டாக்டர் சண்முகரத்தினம் அவர்களின் அருங்குணங்களை நினைவு கூருகிறார் பாடசாலை காலத்து நண்பர்)



இன்றுடன் பதினறுவருடங்கள் உருண்டோடிவிட்டன. நமது டாக்டர் சண்முகரத்தினம் மறைந்துவிட்டாரென்பதை நம்பவே முடியவில்லை.

சேவையே பெரிதெனவாழ்ந்த இப்பெரியாரை அவ்வப்பொழுது நினைவு கூருதல் சமுதாயதின் முக்கிய கடமை என்பதை யாம்மறக்கலாகாது. டாக்டர் சமூக சேவையே பெரிதென மனதில் பதித்து பணிபுரிந்ததை மறக்க முடியாது.

எம். ஈ. ஷாஹுல்

யாழ். இந்துக்கல்லூரியில் உயர் கல்விகற்கும் சமயம் தினமும் நாங்கள் ஒன்று சேர்ந்து வெள்ளாந்தெரு சந்தியிலிருந்து கல்லூரிவரை செல்வது வழக்கம். அப்பொழுது டாக்டர் அவர்கள் ஆர்வத்துடன், அக்கறையுடன் பொதுச்சேவைபற்றியே அடிக்கடி சம்பாஷிப்பதுடன் அதனாலடையும் நன்மையைப்பற்றியும் கூறுவார். ஒருசமயம் கல்லூரிக்குச் செல்லும் பொழுது பிரப்பங்குள வீதியோரத்தில் சுமார் 85 வயதைக்கடந்த ஒருவயோதிபர் விழுந்து கிடப்பதைக் கண்டும் அவரின் அழுகைக் குரலையும் கேட்டும் திடுக்குற்ற டாக்டர் ''எத்தனைபேர் இந்த வயோதிபரை கண்ணுற்றும் அவரின் அவலக்குரலைக் கேட்டும் எதுவித இரக்கமில்லாமல் சென்றுகொண்டிருக்கிறார்களே இது கடவுளுக்கே பொருத்தமானதில்லையே'' என கூறி கண்கலங்கி தனது அங்கவஸ்திரத்தால் அந்த ஏழையை போர்த்திக் கரங்களால் அணைத்து நீண்டதூரமான அவரின் இல்லம்சேர்ந்த காட்சியைக் கண்ணுற்றயான் டாக்டர் அவர்கள் ஒருநாள் சிறந்த சமூகசேவையாளராகத் திகழ்வாரென மனதில் எண்ணினேன். இவர் இறக்கும்வரை ஏழைமக்களுக்கு ஆற்றிய பொதுத்தொண்டே எனது எண்ணத்திற்கு சான்றாகும்.

டாக்டர் அவர்கள் இந்தியா சென்று சித்த ஆயுள்வேதம் பயின்று பல பரீட்சைகளில் விசேஷ சித்தியடைந்து யாழ் நகர் திரும்பியதும் வெள்ளாந்தெருவில் வைத்தியசாலையை நிறுவி பொதுவாக ஏழைமக்களுக்கு இலவசமாகச் சிகிச்சை செய்துவந்தார். எப்பொழுதும் புன்னகையுடனே யாருடனும் கதைப்பதும், சுக சேதி விசாரிப்பதும் வழக்கம். சிறிதளவாகிலும் மனம் கோணாது, சினங்கொள்ளாது அக்கறையுடன் நோயாளிகளைக் கவனிப்பதும் அவரின் சிறந்த வழக்கமாகயிருந்தது. வண்ணார்பண்ணை மேற்குபகுதிக்கு பிறப்பு, இறப்பு பதிவுகாரராகவும் கடமைபுரிந்து அரசாங்கத்தின் புகழையும் பெற்றார்.

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று தமது அருமைத் தமையனாரின் உதவியுடன் ''ஈழநாடு'' பத்திரிகையை ஆரம்பித்து சேவை செய்தார். அன்னார் ஆற்றிய பற்பல சேவைகள் மக்கள் நினைவில் என்றென்றும் பதிந்திருக்குமென்பது உறுதி.

## மருத்துவ மாமணி!

அன்பினால் உயர்ந்தாய் என்பர்
அடுத்தவர்க்குதவும் நல்ல
பண்பினால் உயர்ந்தாய் என்பர்
பழகுதற் கேற்றதான
நண்பினால் உயர்ந்தாய் என்பர்
நன்மையால் உயர்ந்தாய் என்பர்
என்னையும் பிறர்க்கே ஈயும்
இயல்பினை இனியை நீயே.

குன்றினிற் பிறந்த கங்கை
குவலயம் செழித்தற்காக
என்றென்றும் பாய்தல் போல
ஏற்றதாம் குடும்பம் என்ற
நன்றினிற் பிறந்த நீயோ
நாளெல்லாம் உலகம் உய்ய
ஒன்றல்லப் பலவாம் நன்மை
புரிந்தனை உயர்ந்த பண்ப.

ஈழநா டென்ற எங்கள்
இன்தமிழ் ஏட்டிற்காக
நாளெல்லாம் உழைத்த நின்றன்
நலத்தினைப் போற்றுவோரும்
ஏழையாய் இருந்தோர் தங்கள்
இடர்கண்டே பிணிதீர்த்திட்ட
தோழமை உள்ளம் கண்டு
தொழுபவர் தாமும் பல்லோர்.

புனிதமாம் உள்ளம் கொண்டோய்
புகலரும் செயல்கள் கொண்டோய்
இனிதாய சொற்கள் கொண்டே
எவருக்கும் உதவும் நல்லோய்
மனிதாபிமானம் என்ற
வார்த்தைக்குப் பொருளும் ஆவாய்
நினதாய பணிகள் நாட்டில்
நிலைத்தமை அறிந்தோம் வாழி.

- ம. பார்வதிநாதசிவம்

### ஆவரங்கால்

## நடராச இராமலிங்கேஸ்வரர் கோயில் கும்பாஷேகம்

ஆன்மாக்களை இறைவனிடத்தில் சேர்த்துத் திளைவைக்கும் இடங்களே ஆலயங்கள். அந்த ஆலயங்களை அழிவுறாது போற்றிப் பாதுகாத்து வருதல் நமது தலையாய கடனாகும். அப்பணி ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகச் செய்யும் நற்பணியாதலால் அதுவே திருப்பணியுமாகும்.

இராமலிங்கேஸ்வரப் பெருமான் பர்வதவர்த்தனியம்மை சமேதராய்க் காட்சி கொடுக்கும் ஆவரங்கால் சிவன் கோயில் கும்பாபிஷேகம் நிகழ்ந்து பல்லாண்டுகளாயினமையால் கோயிலின் பல பகுதிகள் சீர்திருத்தியமைக் வேண்டிய நிலையிலிருந்தன, அதனை நிறைவேற்றும் அவசியத்தைக் கண்ட தர்மகர்த்தா சபையினரும், உபயகாரர்களும் ஊர்மக்களும் சேர்ந்து 1978ம் ஆண்டு தை மாதத்தில் இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளை தொடக்கி வைத்தார்கள். இத்திருப்பணி வேலைகளைக் கவனிக்க ஒரு திருப்பணிச் சபையும் நிறுவினார்கள்.

கோயிலின் பல்வேறுபாகங்களும் சிதைவு அடைந்திருந்தது. அவைகளைச் செப்பனிட பெரும் பொருள் தேவைப்பட்டதாலும் குறிப்பிட்ட காலத்திற்குள்கும்பாபிஷேகம்நடத்த வேண்டியிருந்ததாலும் மிகவும் அவசியம் என்றுகணட பகுதிகளைத் திருத்தம் செய்து கும்பாபிஷேகத்தை இன்று புதன்கிழமை காலை 10-45 மணிக்கு நடத்துகின்றனர்.

இந்தக் குடமுழுக்கு வைபவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு புதிய அருளொழுக்கத்தை வளர்க்கத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

சதா. லோகேஸ்வரன்

# மக்கள் கருத்து

### நல்லூர் இராசதானியில் இந்து பரிஷத்

உலகத்தில் தமிழ் இந்துமன்னன் கடைசியாக அரசோச்சிய இடமாக நல்லூர் இராசதானி இருந்த பகுதியில் தற்சமயம் இலங்கை அரசினால்

(5-ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

''எவன் றமழான் மாதத்தில் மறந்து நோன்பைத் திறந்தானோ அந்த நோன்பை அவன் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அந்த நோன்பு அவனுக்கு களாவாக மாட்டாது''

ஸஹர் முடிபு 4-23
நோன்புதிறக்கும்நேரம் 6-29
தொகுப்பு: சுல்பிக்கா—கௌது

# ''ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான கொடுமைகள் நீங்கும்வரை போராட்டம் வெற்றிதரா''

[யாழ்ப்பாணம்]

''யாழ். மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களின் சட்ட பூர்வமான உரிமைகள் இற்றைவரை கொடுக்கப்படாமலேயே இருக்கின்றது. தொழில் இலாகா இதற்காகத் துரிதநடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே தலைமைத் தொழில் இலாகா மூலம் உடன் நடவடிக்கை எடுத்துத் தீர்க்கப்படாத பிரச்னைகளைத் தீர்க்க ஆக்க பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்''

இவ்வாறு லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு எல். டபிள்யூ பண்டித, லங்கா தொழிற்சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மாவட்டச் செயலாளர்திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது;-

''தொழில் இலாகாவை முற்றுமுழுதாக தொழிலாளர்கள் நம்பியிருக்கமுடியாது. வர்க்க ஒற்றுமையுடன்போராடுவதன் மூலம்தான் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

நல்லூரிலுள்ள ஒரு எஞ்சினியரிங் தொழிற்சாலை இளைஞர்களை வைத்து அடிமை வேலை செய்விப்பதாகவும், இவர்கள் மாதம் முப்பது நாளும் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 20ம் நூற்றுண்டில் இப்படி நடப்பது மிகவும் வேதனைக்குரியது. இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தொழிலாளர்களுக்கு பல சட்டபூர்வமான உரிமைகள் இருந்துங்கூட அவை சரிவர அமுல் நடத்தப்படுவதில்லை. தொழிற்சங்கம் மூலம்தான் இவற்றை அமுல் நடத்தமுடியும். சில முதலாளிமார் தொழிற்சங்கங்களை பேயோ பிசாசோ என எண்ணுகின்றனர். இதுதவறு நிர்வாகத்தை சரிவர நடத்த உதவி செய்வது தொழிற்சங்கம். இதனால் நிர்வாகிக்கும் பிரயோசனமுண்டு. தொழிலாளர்களுக்கும் பிரச்னைகள் இல்லை''

[மா]

முங்கொடை

## முருகன் ஆலய கும்பாபிஷேகம்

[கரவெட்டி]

கரவெட்டி மேற்கு மத்தொனி ஸ்ரீ முங்கொடை முருக ஆலய மாக கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை காலை நடைபெறவிருக்கின்றது.

மண்டலாபிஷேகம் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

கடந்த திங்கட்கிழமை மாலை கிரியாகால நிகழ்சசிகள் ஆரம்பாகியுள்ளன

திருப்பணிவேலைகள் செய்து முடிக்கப்பட்ட இவ்வாலயத்துக்கு வேண்டிய கலசங்களை தொழிலதிபர் திரு. க. கனகராசா, ஆலயத்துக்கு நேரில் சென்று வழங்கவுள்ளார்.

[மா]

ஆவரங்கால்

## சிவன்கோவில் மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன்கோவிலில் இன்று காலை ஒன்பது மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பு நிழ்ச்சியாக மாலை 6மணிக்கு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு உரைநிகழ்த்துவார்.

## பாராட்டு

(கொக்குவில்)

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் கந்தபுராணப் பிரசங்கம் நிகழ்த்திய திருப்பூங்குடி வி கே. ஆறுமுகத்துக்கு பூங்காவன விழாவில் பாராட்டு நிகழ்ந்தது. ஆலய முகாமையாளர் திரு. சு. சிவநேசன் பொற்கிழி வழங்கி பாராட்டினார்.

# ''விளையாட்டிலும் மாணவர் அக்கறைகாட்ட வேண்டும்''

(புலோலி)

''மாணவர்கள் கல்வியில் மாத்திரமின்றி விளையாட்டுக்களிலும் பங்குபற்றும்போது தான் எதிர்காலத்தில் நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாகத் திகழமுடியும் இதனைக் கருத்தில்கொண்டே அரசாங்கம் விளையாட்டுத் துறையை ஊக்குவித்துவருகின்றது''

இவ்வாறு புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் குறிப்பிட்டார். அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் இவ்விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

அபதிர் தனது தலைமையுரையில் ''உடல் உறுதியை வலுப்படுத்தவும் மாணவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தவும் விளையாட்டுகள் முக்கியமாகின்றன. எனவே விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டியது மிக முக்கியமாகின்றது''என்றார்.

அனுராதபுரம்

## விவேகானத்தசபை நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம்விவேகானந்த சபையின் 57வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது, பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த திரு த. சகாதேவன் பொதுச் செயலாளராகவும்.

தலைவர் பதவிக்கு பிரபல சட்டத்தரணியும்,சமூகசேனவயாளருமான ம. கணேசமூர்த்தியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய உறுப்பினர் விபரம் பின்வருமாறு:-

சபையின் காப்பாளர்களாக சுவாமி பிரேமாத்மானந்தா, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க. ஞானச்சந்திரன், பொறியியலாளர், க. த. சுப்பிரமணியம், சி. கந்தசாமி, அனுராதபுரம் கதிரேசன் கோவில் சிவஸ்ரீ பொ. நடராஜக் குருக்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

துணைத்தலைவர்கள்: வ. இராமச்சந்திரன், சி. பொன்னுத்துரை, அ. வேல்முருகு, கை. இரத்தினசிங்கம், இ. சிவசுப்பிரமணியம்.

துணைச் செயலாளர்கள்: க. சச்சிதானந்தம், வே. பாலேந்திரா. பொருளாளர்: த. சண்முகநாதன். நூலகர்: வே. அருணகிரிநாதன். விடுதிப் பொறுப்பாளர்: தி. மாணிக்கவாசகர்.

# திருட்டு நடத்த வேவு பார்த்தாராம்

## சந்தேக நபர் பொலிஸில்

(மாவிட்டபுரம்)

திருட்டுக்கு வேவு பார்க்க வந்தவர் என சந்தேகிக்கப்பட்டு பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நபர் ஒருவர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பாலச்சந்திரன் என்பவரே இவ்வாறு பிடிக்கப்பட்டவர்.

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்திய அதிகாரி திரு. கதிர்காமர் சண்முகலிங்கம் என்பவரது வீட்டுப்பக்கமாக கடந்த 3 வாரங்களுக்கு முன் உலாவிய இந்த நபர் வைத்திய அதிகாரியின் மகளிடம் வீட்டில் நகைகளை எங்கே வைத்திருக்கிறீர்கள் என விசாரித்துப் பார்த்ததாகவும் பின்னர் மீண்டும் இங்கு வந்து வைத்திய அதிகாரியின் வீட்டுப்பக்கம் இவர் உலாவிய சமயம் பொதுமக்கள் இவரில் சந்தேகம் கொண்டு பிடித்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நபர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இவர் திருடர் கோஷ்டியைச் சேர்ந்தவரா? இவரிடம் திருடும் எண்ணம் இருந்ததா? இவருடன் இணைந்து மேலும் யாராவது செயல்படுகிறார்களா? என்பது பற்றியெல்லாம் பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

## பிரதேசசபைத் தலைவராக தெரிவு

[மாவிட்டபுரம்]

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவராக திரு. எஸ். சிவமகாராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க,மகாதேவா தலைமையில் பிரதேச சபை அங்குராரப்பணக் கூட்டம் நடந்தது. வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பதினறு கிராமோதய சபைகளின் தலைவர்களில் 14 தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். இருதலைவர்களும் சமூகமளிக்கவில்லை.

தலைவர் தெரிவின்போது மாவிட்டபுரம் கிராமோதய சபை தலைவர் திரு. எஸ். சிவமகாராஜாவை பிரதேச சபை தலைவராக மயிலிட்டி கரை கிராமோதய சபைத் தலைவர் திரு ஐ.பேரின்பம் பிரேரிக்க, இளவாலை கிராமோதய சபை தலைவர் திரு வி. சண்முகநாதன் அனுவதித்தார்.

போட்டி ஏதுமின்றி திரு. சிவமகாராஜா பிரதேச சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், காங்கேசன்துறை எம். பி. திரு அ. அமிர்தலிங்கத்தின் செயலாளரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்.பத்திரிசியார் கல்லூரி அதிபர்

சம். பத்திரிசியார் கல்லூரி அதிபரும் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஆசிரியருமான அருட்திரு பிரான்சீஸ் மைக்கல் யோசவ் அடிகளின் 50வது பிறந்தநாளை இன்று சம். பத்திரிசியார் கல்லூரி தனது குடும்பத்தினத்துடன் இணைத்து பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது.

அருட்திரு மைக்கல் யோசவ் அவர்கள் எளிமை, இனிமை, சிந்தனைக்கூர்மை இவற்றின் மொத்தத்தொகுப்பு புதியதோர் சமுதாயத்தை உருவாக்குத்துடிக்கும் துடிப்புள்ள சிந்தனைச்சிற்பி புதுமைகளைப் புகுத்தி சமுதாயத்துக்கு புத்துணர்வு ஊட்ட அவர் முனைகையில் அவர் அனுபவித்த அனுபவிக்கின்ற சோதனைகள் வேதனைகள் அநேகம் ஆனாலும் இந்த ஐம்பது ஆண்டுகளாக அவர் நடாத்திய 'புதிய உலகினை' உருவாக்கும் பணியில் அவர் பெற்ற அன்பு வெற்றியின் சின்னமே இன்று அவர் வகிக்கும் அதிபர் பதவி.

அவர் அதிபராக மட்டும் திகழவில்லை. மாணவர்களை அரவணைக்கும் கரமாக ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் கரமாக விளங்குகிறார். அவர் கல்லூரியுடன் மட்டும் தனது சமுதாய உருவாக்கலை முடிக்கவில்லை. ''நூலக மீட்பு நிதிவார'' பாடசாலை நிதிசேகரிப்பின் தலைவராக அதிபர்கள் சங்கத்தலைவராக எத்தனையோ வழிகளில் சமுதாயத்திற்கு நற்பணியாற்றிவருகின்றார்

தனது ஒளியை மறைக்க முயலும் தடைகளை சோதனைகளை எல்லாம் வென்று கிறிஸ்தவப் பெருவிளக்காக இப்புவியில் பலாண்டுபெருவாழ்வியற்றிட தமிழ்ச்சமுதாயத்துடன் இணைந்து வாழ்த்துகிறோம் அவர் விரும்பும் இசைமொழியில் கூறுவதானால் ஹப்பி பேர்த் டே ரு யூ...'

—பற்றிமாகரன்

## நல்லூர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து பரிஷத்திற்கென ஒரு கட்டிடம் அமைப்பதற்கு நல்லூர் முத்திரைச் சந்தையடியில் ஓர் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை எமது வடமாகாண அரசியல் உறுப்பினர்களுடன் அல்லாமல் இதுவரை எமது வடமாகாண அரசியலில் தலையிடாத கிழக்கு மாகாண அமைச்சர் ஒருவரும் தலையிடுவதைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது. இந்து பரிஷத்திற்குக் கொடுக்கப்பட்ட இடம் நல்லூர் இராஜதானியின் ஆய்விற்குரிய இடமெனத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இற்றைவரை உண்மையான நல்லூர் இராஜதானியின் சங்கிலியன் தோப்பு ஒருகுடியேற்றத்திட்டமாகவும் தொழிற்சாலைக் காலணியாகவும் மாறி எமது கலாசாரத்தைத் தினமும் அழித்துவருகிறது. அதுமட்டுமன்றி நல்லூரின் கடைசித் தமிழ் மன்னனின் இல்லமெனக் கருதப்படும் வளவுக்குள் வேறு ஸ்தாபனங்களுக்குக் காணி கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்த்தும் பாராது தடுக்காது பாராமுகமாக இருந்துகொண்டு இந்து பரிஷத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை மட்டும் ஆய்விற்குரியதெனக் கூறிஎதிர்ப்புக் கிளம்புவது நியாயமாகுமா? ஆதிகாலத்தில் பறங்கியர் எமது பழமைவாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கிய இடத்திற்கு அண்மையிலேயே இந்துபரிஷத் கட்டிடம்அமைப்பதற்கு ஒரு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எவரையும் புண்படுத்தாத வகையில் அமையவிருக்கும் இப் புனித சைவத்திருப்பணிக்கு ஏன் இந்த முட்டுக்கட்டை என்பதை எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் விளக்கவேண்டும்

--க. சி. இராஜேஸ்வரன்
ஆடியபாத வீதி,
நல்லூர்.


# 27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான பினன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ். லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர் சேனநாயக்கா ஏ எம். எக்ஸ் ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்ீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,055,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,826 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,043 | 9,106,588 | 861,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,482 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சியடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

❖ இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

31-3-81வரை ரூபா 10கோடிக்குமேல் நிலையான வைப்புதொகை

# "நமது போராட்டங்கள் பொதுமக்களைப் பாதிக்கக்கூடாது!"

[மட்டக்களப்பு]

''கடமையில்ஈடுபடும்போது உங்கள் உயிருக்கு அல்லது உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கத்திடமிருந்து கணிசமான அளவு நஷ்டஈட்டைப் பெறுவதற்கு போராடவேண்டும். இதனைவிடுத்து பொது மக்களுக்கு பாதிப்பைஏற்படுத்தும் போராட்டங்கள் நடாத்துவதில் எவ்வித பயனும் இல்லை''.

இவ்வாறு மட்டக்களப்பு தபால் நிலைய மண்டபத்தில் திரு. யோ. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை தபால், தந்தி சேவையாளர் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் 19 வது வருடாந்தமகாநாட்டில்கலந்து கொண்டு உரையாற்றிய தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

''குண்டு வெடிப்பது நமக்கு புதிதல்ல. இன்று உலகின் எல்லாப்பாகங்களிலும் குண்டுகள் வெடித்துக்கொண்டிருக்கின்றன. ஒருநாட்டில் குண்டு வெடிப்பதும், வெடியாததும் அந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பைப்பொறுத்தது. இதனைஒரு காரணமாக்வைத்துக்கொண்டு பொதுமக்களின் சேவைகளுக்கு முட்டுக்கட்டைபோட நாம் எத்தனிப்பது தேசபக்தியாக அமையமாட்டாது'' என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத் தபால் அத்தியட்சகர் திரு வி. நவட்ணம், தாய்ச்சங்க செயலாளர் திரு பி. சாசனதாசா, யாழ் கிளை செயலாளர் திரு. யோசப், மட்டக்களப்புதபால் அதிபர் திரு எஸ். துரைசுவாமி உட்படப்பலர் பேசினர்.

# ஊர்காவல் படையினருக்கு ஊக்குவிப்பு நிதி வேண்டும்!

## கிராமோதய சபை தீர்மானம்

[நல்லூர்]

ஊர்காவல் படையினருக்கு ஊக்குவிப்புச் சம்பளம் வழங்கக்கோரும் தீர்மானம், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஜே. 24 கிராமோதயசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் சபைத்தலைவர், திரு. தே. வி. அருளானந்தம் தலைமையில் பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில்; ஊர்காவல்படைக்குத் தகுதி உள்ளவர்களை தெரிவுசெய்வதற்கும் அவர்கள் தமது பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு சபையினரைக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் ஊர்காவல் படையினருக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை திரு. கு. சுந்தரலிங்கம் முன் மொழிய திரு ஜே. இ. செபஸ்தியாம்பிள்ளை வழிமொழிந்தார். சபையினர் இக் கோரிக்கையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

கடந்த மாதம் அச்சுவேலியில் நான்கு நாட்களாக நடைபெற்ற கிராமோதய பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றிய திரு. அ. யோ. செல்வரத்தினம் பயிற்சி பற்றிய விளக்கங்களை விரிவாக எடுத்துரைத்ததைத் தொடர்ந்து கிராமிய நிலைகள் பற்றிய கருத்தரங்கும் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் சபை உறுப்பினர்களில் ஒருவரான கலைஞர் பூந்தான் யோசெப்பின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## கல்விச் சுற்றுலா

(கரவெட்டி)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 9ம்வகுப்புமாணவிகள் ஆசிரியை திருமதி நீலகண்டன் தலைமையில் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளனர். இவர்கள் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களுக்கும், மடுத்திருப்பதி, திருக்கேதீஸ்வரம் ஆகிய புனித ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்ததுடன், தலைமன்னார் துறையையும் சென்று பார்வையிட்டனர். [கி]

## ஆலய பரிபாலனசபை

[சரவணை]

சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலய பரிபால சபையின் ஆண்டுக் கூட்டம் திரு. செ.ச. சிவம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சட்டத்தரணி திரு. செ. சச்சிதானந்தசிவம், செயலாளர் திரு. த. தெட்சணாமூர்த்தி, பொருளாளர் திரு. கு. கணேசலிங்கம், இளைஞர் சங்க அமைப்பாளராக திரு. முருகதாசு தெரிவு செய்யப்பட்டனர்.

## தற்கொலை

(பண்டத்தரிப்பு)

அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வீட்டில் வந்து தகராறு செய்யும் தமது கணவரை 'இனிக் குடிக்கவேண்டாம்' என்று இளம் மனைவி கூறியபுத்திமதியைப்பொறுக்க முடியாத அக்கணவர் நச்சுத் திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மாதகலில் நடைபெற்றுள்ளது.

மாதகல் வடக்கைச்சேர்ந்த இராமுப்பிள்ளை கந்தசாமி என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரணவிசாரணை பண்டத்தரிப்புப் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரிடாக்டர் அல்போன்ஸ் அத்தனுசியார் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ் சென்றவரின் மனைவி திருமதிஇந்திராணி கந்தசாமி [27 வயது] கூறியதாவது;— காலம் சென்றவரின் மைத்துனரான கந்தையா சண்முகநாதன் என்பவரும் சாட்சியமளித்தனர். விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

## வில்லிசை விரிவுரை

[யாழ்ப்பாணம்]

சரவணை கொட்டாங்காடு ஸ்ரீஞான வைரவர் கோவில் வருடாந்த உற்சவம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்களுக்கு நடைபெவிருக்கிறது. உற்சவ நாட்களில் தினமும் இரவு ''சம்பூர்ண இராமாயணம்'' என்றபொருளில் ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர், திரு. சாம்பசிவசோமாஸ்கந்த சர்மா தலைமையில் தொடர் வில்லிசை நிகழ்த்துவர். [கி]

## பிரதேச சபைத் தலைவராக தெரிவு



[யாழ்ப்பாணம்]

சட்டத்தரணி சதா. லோகேஸ்வரன் வலிகாமம் கிழக்குப் பகுதிப் பிரதேச சபைத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இச் சபை பதினொரு கிராமோதைய சபைகளை உள்ளடக்கியுள்ளது.

சட்டத்தரணி சதா. லோகேஸ்வரன புத்தூர் கிழக்கு கிராமோதைய சபையின் தலைவராகவும், புத்தூர் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அனேக சமூக சேவை இயக்கங்களின் தலைவராகவும் உறுப்பினராகவும் இவர் பணியாற்றிவருகின்றார்.

## கல்லூரித்தினம்

(கரவெட்டி)

கரவெட்டி திருஇருதயக்கல்லூரியின் வருடாந்த கல்லூரித் தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இருதினங்களாக நடைபெற்ற கொண்டாட்டத்தின் இறுதிநாளன்று திருப்பலிப் பூசையும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.


BAYER

ரொக்குத்தயன் 500 ஈ.சி.



வெங்காயப் பயிரைப் பாதிக்கும் ஸ்பொடொப்டராபுக்களை அறவே ஒழித்திட, தரமான பாயர் பீடை நாசினி ரொக்குத்தயன் 500 ஈ. சி. பாவியுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டட்,
400, டீன்ஸ் ரோட், கொழும்பு - 10.

3637

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரவி-விஜயா
நினைவில் நின்றவள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன்-சோபா-பிரதாப் நடித்த
அழியாத கோலங்கள்

Windsor (Jaffna)
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

றீகல் யாழ்நகர் தினசரி 10-30, 2-30, 6-15 9-30
2-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்க, ஜெயபாரதி,
[இலங்கை நடிகை]
நாகேஷ், அனுராதா. பத்மபிரியா
மோகனப் புன்னகை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
6-வது வெற்றி வாரம்



கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. சி திருலோகசந்தரின்
வெள்ளிவிழா சித்திரம்
சிவாஜி - சுஜாதா - ஸ்ரீதேவி
நடித்த
விஸ்வரூபம்
(ஈஸ்ட்மன் கலர்)

# தனிநாடுபற்றித்தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழர்கள்தான்! முதலாளித்துவ அரசல்ல

## மக்கள் விடுதலை முன்னணி அமைப்பாளர் கருத்து

[மட்டக்களப்பு]

''சுயநிர்ணய உரிமைகளுக்காக போராடுபவர்களை நசுக்கி, அடக்கி ஒடுக்குவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ளேம். எந்த ஒரு இனமும் தாம் பிரிந்துசெல்வதற்கு உரிமை உண்டு. தனிநாடு அமைப்பது பற்றி தீர்மானிக்க வேண்டியது தமிழ் மக்களே ஒழிய இந்த நாட்டின் முதலாளித்துவ அரசாங்கங்களல்ல''

இவ்வாறு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மக்கள் விடுதலை முன்னணியினரால் ஒழுங்குசெய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் ''தமிழ்பேசும் மக்களின் பிரச்னையும், மக்கள் விடுதலை முன்னணியின் நிலையும்'' என்னும் தலைப்பில்உரை நிகழ்த்திய சோஷலிஸ வாலிப முன்னணி அமைப்பாளரும், மக்கள் விடுதலை முன்னணி வடக்கு, கிழக்கு மாகாண அமைப்பாளருமான திரு. ஜி. எச். பொன்சேகா கூறினர்

மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு இளைஞர் பிரிவு அமைப்பாளர் திரு எஸ். நேசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்சேகா மேலும் கூறியதாவது:

''ஏகாதிபத்திய வாதத்தில் வளர்த்தெடுக்கப்பட்டவர்கள் தான் முதலாளித்துவ அமைப்பை மேலும் பாதுகாப்பதற்கு தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை கைப்பற்ற முனைகிறார்கள். இவர்கள் தொழிலாள மக்களின் துயரக் கண்ணீரை, உண்மையானஉணர்வுகளை, தமிழ்மக்களின் உள்ளார்ந்த பிரச்னைகளை, உணரத் தவறிவிட்டார்கள் இவர்கள் இந்த நாட்டில் இருக்கின்ற 3226 முதலாளித்துவ குடும்பங்களைத்தான் வளர்த்தார்கள். தமிழ் மக்களின் மத்தியில் செல்வாக்கு மிகுந்திருந்த தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும். இந்த முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு முண்டுகொடுத்து வந்துள்ளார்கள்.

''1971ம் ஆண்டு இந்தநாட்டில்ஏற்பட்ட கிளர்ச்சிசம்பவத்திற்கு 16 நாடுகள் உதவிகள் வழங்கின. இந்தியா தனது படைகளையே வழங்கியது. 81ம்ஆண்டு இந்த நாட்டில் சிங்களவெறியர்களினுல் மலையமக்கள் தாக்கப்பட்டபோது அதில் தலையிடாமல் அது உள்நாட்டுப் பிரச்னை என்று இந்தியா மௌனியாக இருந்ததன் மர்மம் என்ன? 71ம் ஆண்டு சுரண்டலுக்கு எதிராக நடந்தபோராட்டம் உள்நாட்டு போராட்டம் அல்ல வெளிநாடும் தலையிடக்கூடிய பிரச்னையா இருந்தால் 81ம் ஆண்டு எதற்காக இந்தியா தலையிடவில்லை. இந்தியாவின் முதலீடுகள் இங்கு இருக்கின்றன. அதனுல் இந்த முதலாளித்து அரசை தட்டிக்கேட்டால் தமது முதலீடுகளுக்கு பாதிப்பு என்ற எண்ணம் தான்'' என்று கூறினர்.

# ''கொத்தணி அமைப்பு மூலம் கல்வித்தரம் உயரவாய்ப்பு''

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் கொத்தணிப் பாடசாலை முறை அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம் இதில் அங்கம் வகிக்கும் பாடசாலைகளின் கல்வித்தரமும் உயர வாய்ப்பு உள்ளது என்று கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பின் செயலாளரும், கனிஷ்ட மகா வித்தியாலய அதிபருமான திரு. கே. இராசேந்திரம் மேற்படி அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில குறிப்பிட்டார்.

கிளிநொச்சி சிரேஷ்ட மகா வித்தியாலயத்தில் மூலாதாரக் கொத்தணிப் பாடசாலைத் தலைவர் இரா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராசேந்திரம் மேலும் பேசுகையில்

கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றுக்குறை உட்படப் பலவிதமான குறைபாடுகள் நிலவுகின்றன இக். குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். ஆசிரியர்களாகிய நாம் ஒன்றுபட்ட ஐக்கியத்தின் மூலம் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த முன்வர வேண்டும் என்ருர்.

இக்கூட்டத்தில் தமிழ் இலக்கிய தினம், மரம்நாட்டு விழா, ஐக்கியநாடுகள் தினம் ஆகியவற்றைக் கொத்தணிப் பாடசாலை அமைப்பில் உள்ள எல்லாப் பாடசாலைகளும் ஒன்றுசேர்ந்து கொண்டாடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. (அ)

# மோசடி குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வாடகைக்கு வீடு எடுத்திருந்த ஒருவர், வீட்டின் உரிமையாளரிடம் 5 ஆயிரம் ரூபா மோசடி செய்துவிட்டு தலைமறைவாகி விட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பில்விசேடகுற்றத் தடுப்புபிரிவு பொலிசாரிடம் ஏருவூர் வாசியான எஸ். எல். மொகமட் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. கே. வீரபாகு என்பவருக்கு எதிராக முறைப்பாடொன்ற செய்துள்ளார்.

# மரத்திலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சீவல் தொழிலாளி ஒருவர் மரத்திலிருந்து விழுந்து மரணமானர்.

கந்தர் மடத்தைச் சேர்ந்த சண்முகம் இரத்தினம் (33 வயது) என்பவரே மரணமானவராவார்.

மரணவிசாரணையில் கொக்குவிலைச் சேர்ந்த சீனியர் பொன்னுத்துரை [42 வயது] என்பவர் சாட்சியமளிக்கையில், நானும் இறந்தவரும் நேற்று முன்தினம் மாலை கொட்டடியில் தென்னை மரங்களில் கள்ளிறக்குவதகு ஏறிக் கொண்டிருக்கும் பொழுது, தொம்மென ஏதோ சத்தம் கேட்டதாகவும்; தான்ஏறிய மரத்திலிருந்து இறங்கிப் பார்த்தபொழுது, இரத்தினம் இரத்தம் பெருகிய நிலையில் மயங்கிக் கிடந்ததாகவும் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்ததும் அவர் இறந்து விட்டார் என்றும் கூறினர்.

இறந்தவரின் மனைவி சுந்தரி (30 வயது)யும் சகோதரர் சண்முகம் கனகரத்தினமும் சாட்சியமளித்தனர்.

மரணவிசாரணை நடத்திய பதில் நீதவான் என். எஸ். பிரான்ஸிஸ் மரத்திலிருந்து விழுந்ததால் மரணம் சம்பவித்தது என்றும் தீர்ப்பளித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்டபிள் எஸ். நமசிவாயம் சாட்சிகளை ஆஜர் செய்தார். (மா)

## யாழ்.மாவட்டத் தொழிலாளர் பிரச்னை

# ''தொழில் இலாகா மூலம் உடன் நடவடிக்கை''

## பண்டிதர் கூறுகிருர்

(அரியாலை)

''எமக்கு மறுக்கப்பட்டஉரிமைகளை வென்றெடுப்பதற்காக ஏனைய சிறுபான்மைத் தமிழர்களின் இயக்கங்களோடு இணைந்து செயல்படும் நாம் எமது சமூக மக்களின் நல்வாழ்வுக்காக பல செயல் திட்டங்களை செயல்படுத்தி வருகிளேம்''

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 32வது ஆண்டு விழாவின்பேராளர் மகாநாட்டில் மகாசபைத் தலைவர் திரு எஸ். பி. ஜீவானந்தம் தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கோண்டாவிலில் நடைபெற்ற மகாநாட்டை முன்னுள் கொக்குவில் கிராமசபை உறுப்பினர் திரு ப. சின்னத்துரை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். மகாசபைத் தலைவர் திரு எஸ். பி. ஜீவானந்தம் மகாசபைக் கொடியை ஏற்றி வைத்தார்.

அமரர் போல்யோனு அரங்கில் நடைபெற்ற பேராளர் மகாநாட்டில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு சி. இராசரத்தினம் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

பொதுச்செயலாளர் திரு. க. கிருஷ்ணராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து மகாசபைத் தலைவர் மேலும் பேசுகையில் ''மகாசபையின் முன்னேடிகள் காட்டிய சீரியபாதையின் வழியே நாம் நடந்து செல்லுகிளேம். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சகாயநிதிமூலம் சுமார் ஐம்பது பிள்ளைகளுக்கு மகாசபை கல்வி உதவி வழங்கிவருகிறது. இந்த நாட்டில் வாழும் சகலருக்கும் வேறுபாடின்றி சர்வஜன வாக்குரிமை வேண்டுமென்று கிளர்ச்சிசெய்தவர்களில் நமது தலைவர் யோவேல் போலும் ஒருவராவர். இன்று சமூக இயக்கங்கள் எமது மக்களின் விடிவுக்காக உழைக்குமே தவிர தமிழ் மக்களின் போராட்டங்களைப் பலவீனப்படுத்தமாட்டா. இந்த நாட்டில் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழும் மக்களுக்கெதிராக நடத்தப்படும் சாதி சம்பந்தமான சகல கொடுமைகளும் நீங்கினுலே ஒழிய தமிழ் மக்களின் போராட்டங்கள் எதுவும் வெற்றிதரமாட்டாது'' என்ருர்.

## கோண்டாவில்

# தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்க திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில்—இணுவில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் புதியகட்டிடத் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது

மேற்படி சங்கத்தலைவர் திரு க. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இத்திறப்புவிழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் புதிய கட்டிடத்தை திறந்துவைப்பார்.

கூட்டுறவு ஆக்கஉதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை, மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவர்.

## முட்டை ஓவியம்:

# மாணவர்களுக்கு விசேட அனுமதி

### கண்காட்சி காலை 9 மணிக்கு ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் முட்டை ஓவியக்கண்காட்சியை, வட பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களும் கண்டுகளிப்பதற்கு வட மாநில கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதற்கான சுற்று நிருபங்கள் பாடசாலை அதிபர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியரான திரு. எம். எம். சண்முகம் முட்டைக்குள்ளும், அரிசியிலும் தமது கைத்திறமையாலும், மனோ வலிமையாலும் வரைந்துள்ள ஓவியங்களே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தினசரி காலை ஒன்பதுமணி தொடக்கம் இக்கண்காட்சியைப்பார்ப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு ஒரு ரூபா கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

அல்வாய் ஸ்ரீலங்காவித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறுகின்றது.

வித்தியாசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் இப்போட்டிக்கு பிரதம அதிதியாக பருத்தித்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தன் கலந்து கொள்கின்றார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், யாழ். கல்வி அதிகாரி திரு. க. மகேசன் ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றனர். பாடசாலை அதிபர் திரு. வே. த. தணிகாசலம் தலைமையில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டியை சட்டத்தரணி திரு. மு. சிவகுருநாதன் கொடியேற்றி ஆரம்பித்துவைக்கிறார்.

## பாரதி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இன்று பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## இசை விருந்து

[யாழ்ப்பாணம்]

சுருவில் ஐயனார் கோவில் தேர்த் திருவிழாவையொட்டி இன்று மெல்லிசை மன்னர் ரீ கே. ராமமூர்த்தி குழுவினரின் இசைவிருந்து இன்று மாலை இடம்பெறும்.

## முன்னாள் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு

புவனஸ்அயர்ஸ், ஜூன், 29

முன்னாள் ஆர்ஜென்டீனா ஜனாதிபதிக்கு எதிராக அதிகார துஷ்பிரயோகம், தஸ்தாவேஜுக்கள் மோசடி ஆகியன தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

## கைதான....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரணையைக் கொண்டுவந்திருந்தார்.

யாழ். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சமுகமளித்திருந்தனர். பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமான கூட்டம் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

''தமிழ் நாட்டில் கைதான தமிழ் இளைஞர்களுக்கு இந்தியாவில் அரசியல் தஞ்சம் கொடுக்கும்படி கௌரவ இந்திய ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைக் கோருவதென இச்சபை தீர்மானிக்கிறது.'' (மா)

## ஈராக் அமைச்சரவை மாற்றம்

பாக்தாத். ஜூன், 29

ஈராக் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. எண்ணெய் வர்த்தக அமைச்சராக புதியவரொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வெ)

## ஈராக் படைகள் வாபஸ்

பாக்தாத். ஜூன். 29

ஆக்கிரமிக்கப்பட்ட ஈரானியப்பிரதேசத்திலிருந்து ஈராக் படைகள் வாபஸ் பெற்றுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது [வெ]

## மத்யூ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்யப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளிலும் வீதிகளிலும், சீமெந்து தொழிற்சாலை சுற்றுடலிலும் பொலிசார் ரோந்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

## வேலை இழந்த...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

கூலியை தற்போதைய நிலைக்கேற்றவாறு வழங்கவேண்டும் சங்கத்திற்கென புதிய செயலக மொன்றை சொந்தமாக ஏற்படுத்தவேண்டும்.''

இவ்வாறான தீர்மானங்கள் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 17 வதுஆண்டுநிறைவு மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகிகளின் தெரிவில் தலைவராக திரு ஆ. சங்கரப்பிள்ளையும், பொதுச்செயலாளராக திரு. பீ. வாமதேவனும், பொருளாளராக திரு த. சித்திரவேலும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

துணைத்தலைவர்களாக திருவாளர்கள் எம். மகேந்திரராஜா, ஏ. சண்முகநாதன், துணைச்செயலாளர்களாக திருவாளர்கள் எஸ். இரத்தினசிங்கம், வே தனபாலசிங்கம்துணை பொருளாளர்களாக திரு. வாளர்கள் ச. ஆனந்தராசா, க. சச்சிதானந்தன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் கே. சித்திரவேல், ச. ஜெயபாலன், க. அருணாசலம், எஸ். நாகராசா, ஜனாப சலாவுதீன், எஸ். செல்வரத்தினம், த திருநாவுக்கரசு, போகநாதன் ஆகியோரும் கணக்குப்பரிசோதகராக திரு. கே. சபாரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர் (சி)

## இப்படியும் நடக்கிறது

**யாழ்.** மாவட்டத்தில் ஒரு பாடசாலை.

பாடசாலை அனுமதி கேட்டுப்போனால்; பாடசாலை திருத்த வேலைகள் என்று கூறி; சிமெந்து, மணல், சுண்ணாம்பு பெயின்ற் வகைகள் எனக்கோரப்படுவதுடன்; ''இவற்றை நீங்கள்........ கடையில் பெற்றுக்கொள்ளலாம்'' என்றும் (கடையின் பெயர் கூறி) பணிக்கப்படுகிறதாம்.

பாடசாலை திருத்தப்பட்டால் பரவாயில்லை. இத்தனை சாமான்களும் அதிபரின் உறவினர் வீட்டுக்குச் சென்றடைவதுதான், துலக்கப்பட வேண்டிய மாமம!

'ஊடுருவி'

# துப்பாக்கி முனையில் நகைகள் கொள்ளை

(மாவிட்டபுரம்)

துப்பாக்கியைக்காட்டி ''சுடுவோம்'' எனப்பயமுறுத்தி வீட்டிலிருந்த 29 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அராலி மேற்கில் மங்கையற்கரசி சிவபாதசுந்தரம் என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

கொள்ளை இடம்பெற்ற விதம் பற்றி மேற்படி பெண்மணி காங்கேசன்துறை பொலிசில் விபரிக்கையில் கூறியதாவது:

இரவு 7-30 மணியளவில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வீட்டிலுள்ளவர்கள் படுக்கைக்குச் சென்றோம்இரவு 10 30 மணிபோல் எழும்பும் என்று யாரோ ஒருவர் என்னை தட்டி எழுப்பினர் அவருடன் வேறு ஒருவரும் நின்றார் அத்துடன் வீட்டிற்கு வெளியிலும் வேறு ஒருவர் நின்றார். நகைகள் எங்கே என அவர்கள் கேட்டனர். நகை ஒன்றும் இல்லையெனக் கூற அவர்கள் என்னைப் பயமுறுத்தினர். சத்தம் போட்டால் சுடுவோம் என்றனர். பின் மகன் தர்மசீலனை எழுப்பி அலுமாரித் திறப்பு எங்கே என்றனர். அவர்திறப்புபற்றித் தெரியாது என்றார். பின்னர் மற்ற மகன் சத்தியசீலனை எழுப்பி அவரை பயமுறுத்தியதையடுத்து அவர் திறப்புகளை எடுத்துக்கொடுத்தார். அதனால் நகைப்பெட்டியை திறந்த அவர்கள் 10பவுண் தாலிக்கொடி, கசப்பு, மோதிரம் ஆகிய 29 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்

இப்புகாரையடுத்து காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

## வன்செயல்கள்

லண்டன், ஜூன், 29

பப்புவா நியூகினியில் இடம்பெற்ற பொதுத் தேர்தலையடுத்து அங்கு வன்செயல்கள் தலைதூக்கியுள்ள்தாக அறிவிக்கப்பட்டது.

பப்புவாநியூகினியின் மத்திய பிரதேசத்தில் கலவரங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள வானொலி நிலையத்தைக் கைப்பற்றவும் ஒரு குழுவினரால் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது.


## மரண அறிவித்தல்

### சு. மயில்வாகனம்
### தெல்லிப்பளை

இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் சுப்பிரமணியம் மயில்வாகனம் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் தெய்வேந்திரமணியின் அன்புக் கணவரும், இரத்தின குமாரனின் தந்தையும் (காணிப்பதிவகம்), நடராசாவின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-06-82) புதன்கிழமை மூன்று மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

''தங்கவாசம்'', தெல்லிப்பளை.

3713



## மரண அறிவித்தல்

### யோசப் சின்னத்துரை

நெடுந்தீவைச்சேர்ந்த ஆயுர்வேத வைத்தியரும் இளைப்பாறிய ஆசிரியருமான யோசப் சின்னத்துரை காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்ற மேரிதிரேசாவின் கணவரும், றூபி, ஜெயமணி [அதிபர் நெடுந்தீவு], இராஜசூரியர் [ஆசிரியர் பிரான்ஸ்], ஜெயராஜா [அதிபர் இராமனுதபுரம்] சங் சிஸ்டர் ஒலிவியா [கன்னியர் மடம் யாழ்ப்பாணம்], டாக்டர் ஜெயரட்ணம் [மாத்தளை], ஜெயபாக்கியம் [வைத்தியசாலை சங்கானை], ஜெயசீலன் [மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் மாங்குளம்], டாக்டர் ஜெயமலர் [ஜெர்மனி], ஜெயந்திரா [கிராம சேவையாளர் ஊணுக்காய்], ஜெனிற்ரு [ஜெர்மனி], சபின்ஸ் ஜெயசேகரா [கணக்காளர் ஜெர்மனி], ஆகியோரின் தந்தையும் கனகரத்தினம் [அதிபர் வன்னேரிக்குளம்], ஜெயராணி [ஆசிரியை கரவெட்டி], பற்றீசியா, லெனிற்ரு [ஆசிரியை மாத்தளை], நடேசன் [கணக்காளர் கண்டி] ஜெயந்திரா [ஜெர்மனி], யோகம், செல்வரட்ணம் [ஜெர்மனி], காலம் சென்ற அல்பிரட், மங்கையர்க்கரசி [ஆசிரியை], ஆகியோரின் மாமனாரும், பெனடிக்ற் அவர்களின் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெடுந்தீவில் 30ம் திகதி இன்று புதன்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறும்.

3709 யோ. வி. சே. ஜெயசீலன்.



## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் கல்வளை றோட் முடிவு மதவடி) ஆலங்குளாய் தொடக்கத்தில் 7 பரப்புக் காணியும், சகல வசதிகளுடன் வீடும் கடையும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேல்வரும் விலாசத்தில் திரு S. மார்க்கண்டுடன் தொடர்பு கொள்ளவும்.

3706



## மரண அறிவித்தல்

### திருமதி காவேரியம்மா துரையப்பா

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி காவேரியம்மா (யோகம்) துரையப்பா காலமானார்.

இவர் காலம்சென்ற திரு. செல்லப்பா துரையப்பாவின் அன்பு மனைவியும், விஜயராணி (பத்மா), விஜயரத்தினம் (நெடுஞ்சாலைத் திணைக்களம், செட்டிகுளம் வவனியா), விஜயராசா (நில அளவையாளர் திணைக்களம் யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி (தங்கா (லண்டன்), சாந்தகுமாரி (பவானி) (லண்டன்), வரதராஜன் (விஜயலட்சுமி மில், ஏறூவூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வ. கந்தசாமி (ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம், மகாலட்சுமி, கருணாதேவி, சற்குணனந்தன் லண்டன்), சண்முகராஜா லண்டன்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், வி. பாலசுப்பிரமணியம் (நீர்ப்பாசன இலாகா, தலைமைக் காரியாலயம், கொழும்பு), Dr. வி. பாலச்சந்திரன் (அவுஸ்திரேலியா), திருமதி தில்லைநாயகி (பேபி) தருமராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 30-6-82 பி. ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி. ப. 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

125, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

3697


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் மீ 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.